தும்போது—அவர்கள் சட்டசபை உறுப்பினராக இருக்கலாம்—அது எந்த அளவிற்கு இந்த அவையின் உரிமையைப் பாதித்திருக்கிறது, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எந்த அளவிற்கு அவர்கள் உரிமையைப் பாதித்திருக்கிறது, அதன் வாயிலாக இந்த அவையைப் பாதித்திருக்கிறது என்பதைப் பற்றி ஒன்றும் தெரிவிக்காது இவ்வளவு நேரம் விவாதம், அதைப்பற்றி வைத்துக்கொண்டு எங்கள் நேரத்தை, உறுப்பினர்கள் நேரத்தை எடுத்துக் கொண்டிருப்பது முறையா ?

மேலும் சபாநாயகர் அவர்களைப் பற்றி சிலநேரங்களில் இந்த அளவிற்குப் பேசும்போது அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? அவை முன்னவர் அவர்கள் 'ஏன் அவர்களை இரண்டு நாட்கள், மூன்று நாட்கள், ஒரு வாரத்திற்கு சட்டமன்றத்திற்கு வரக்கூடாது', என்று சஸ்பென்ட் செய்யும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன். இது மிக முக்கியமானதொன்றாகும். It is a serious matter. தலைவர் அவர்கள் இந்தப் பேரவையின் கௌரவத்திற்கு ஒரு சின்னமாக இருக்கும்போது 'கவர்ட்' என்று உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது அவை முன்னவர் அவர்கள் உடனடியாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி அவர்களை இந்த அவையில் இருந்து நீக்கவேண்டும் என்று அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இதை ஒரு உரிமைப் பிரச்னையாக எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நா. வீராசாமி அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை இப்பொழுது விளக்கலாம்.

### (இ) 'தென்னகம்' நாளேட்டில் பேரவைத் தலைவர் மீது களங்கம் ஏற்படுத்தும் செய்தியை வெளியிட்டது குறித்து.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 182-வது விதியின்படி கீழ்க்கண்ட உரிமை மீறல் குறித்த தீர்மானத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்.

*1973 நவம்பர் 21]* *[திரு. நா. வீராசாமி]*

தென்னகம் தமிழ் நாளேட்டில் சென்னை 20—11—73, வெளியூர் 21—11—73, "அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் உரிமையை தட்டிப் பறிக்கும் புலவர் கோவிந்தனின் போக்கை எதிர்த்து அண்ணா தி.மு.க. வெளிநடப்பு" என்ற தலைப்பிட்டு ஒரு செய்தி வெளிவந்துள்ளது. அதில் 'வெளிநடப்பு' என்ற சிறிய தலைப்பில் "மீண்டும் டாக்டர் ஹாண்டே எழுந்திருந்து கூறியதாவது: 'அண்ணா தி.மு. கழகம் என்றாலே உங்களுக்கு ஆகாததாகி விட்டது, எங்கள் உரிமைகளை நீங்கள் தடுக்கிறீர்கள், இதைக் கண்டித்து நாங்கள் வெளியேறுகிறோம்' என்று கூறினார். உடனே அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்" என்று வெளியிடப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் மீது களங்கம் ஏற்படுத்தும் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள 'தென்னகம்' நாளேட்டின் ஆசிரியர், உரிமையாளர், அச்சிடுவோர் ஆகியோர் மீது அவையுரிமையை மீறிய குற்றம் ஏற்பட்டுள்ளது. இதை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

தலைவர் அவர்களே, இந்தச் செய்தியை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிற நேரத்தில் உரிமை மீறப்பட்டிருக்கிறது என்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும். நேற்று காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்னைக்கு தீர்ப்பளிக்கக் கூடிய முழு அதிகாரமும் தங்களுக்கு இருந்தும்கூட இம்மன்ற உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதன் காரணத்தால் மிகப் பெருந்தன்மையோடு தாங்கள் எதிர்கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களை கேட்டுக்கொண்டிருந்தீர்கள். திரு. மணலி கந்தசாமி அவர்களின் பெயரைச் சொல்லி அவர்களை பேச அழைத்த நேரத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்து நின்று தங்கள் அனுமதி இல்லாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். தங்கள் அனுமதி இல்லாமல் பேசுகிற எல்லாப் பேச்சுக்களும் இம்மன்றக் குறிப்பேட்டில் ஏறுவதில்லை. இந்த மன்றத்தின் மரபுகளைத் தாங்கள் சுட்டிக்காட்டி ஒரு பிரச்னையில் எதிர்கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களைக் கேட்பது மரபு, ஒவ்வொரு பிரச்னையிலும் எல்லா உறுப்பினர்களுடையவும் கருத்துக்களைக் கேட்பது என்பது இயலாத காரியம் என்று சொன்னீர்கள்.

ஆனால், நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் தங்கள் அனுமதி இன்றி தங்களைக் குறித்து இழிவான, முறைகேடான வார்த்தைகளால் எது எதையோ பேசிக்கொண்டிருந்தார்கள். இறுதியாகத் தாங்கள் தீர்ப்பு கொடுப்பதற்கு முன்னால் கூச்சல் போட்டுவிட்டு வெளியேறினர். அந்த நிகழ்ச்சியை வேண்டுமென்று 'தென்னகம்' பத்திரிகை தெரிந்திருந்தும்கூட அதை வெளியிட்டிருக்கிறது. அப்படி வெளியிடுவது தங்களை அவமதிப்பதாகும் என்று தெரிந்தும் தங்களுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும், மக்கள் மன்றத்தில் தவறான எண்ணங்களை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

இப்படி, பேரவைத் தலைவரைக் குறித்துத் தவறான முறையில் பேசுவதும், எழுதுவதும் தவறு என்ற அடிப்படையில் நாம் பின்பற்றுகிற 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸ்' என்ற புத்தகத்தில் 148-வது பக்கத்தில் பத்தாவது சாப்டரில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

Reflections on the character of the Speaker and accusations of partiality in the discharge of his duty'.

என்று சொல்லி அதில் 'Cases of Woodfall' என்று அதை ரெபர் செய்திருக்கிறார்கள். அதேபோல், Mr. Atkinson, Mr. Wedgwood and Mr Ginnell.

போன்ற பெரிய பெரிய அறிவாளிகள் சொல்லியிருக்கிற தீர்ப்புகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பார்க்கும்போது, எந்த மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸை நாம் பின்பற்றுகிறோமோ அந்த விதிகளின் கீழ் இவைகள் எல்லாம், தலைவரின் மீது குற்றம் சுமத்துவது, பழி சுமத்துவது, இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பவை தவறானவை என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிற 'தென்னகம்' பத்திரிகை ஆசிரியர், உரிமையாளர், அச்சிடுவோர் ஆகியோர் மீது உரிமைப் பிரச்னை நிச்சயமாக இருக்கிறது. எனவே இதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எழுப்பியுள்ள பிரச்னை மீது என்னுடைய தீர்ப்பை நாளை தெரிவிக்கிறேன்.